www.Padasalai.Net www.Padasalai.Org

டால்மியா மேல்நிலைப் பள்ளி ,டால்மியாபுரம்.

மாதிரி முழு ஆண்டுத் தேர்வு மதிப்பெண் :100

வகுப்பு : 8 கணிதம் காலம் : 2.30 ம .நே

==========================================================================

பகுதி - I

<u>கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும் .</u> (15 x 1 =15)

**1.** $\frac{-5}{4}$ என்ற விகிதமுறு எண்ணானது ________ ஆகியவற்றின் இடையில் அமையும்.

(அ) 0 மறறும் $\frac{-5}{4}$ (ஆ) -1 மற்றும் 0 (இ) - 1 மற்றும் - 2 (ஈ) - 4 மற்றும் - 5

**2.** பின்வரும் விகிதமுறு எண்களில் எது மிகப் பெரியது?

(அ) $\frac{-17}{24}$ (ஆ) $\frac{-13}{16}$ (இ) $\frac{7}{-8}$ (ஈ) $\frac{-31}{32}$

**3.** $(-2)^{-3}$ x $(-2)^{-2}$ என்பது _____ ஆகும். (அ) $\frac{-1}{32}$ (ஆ) $\frac{1}{32}$ (இ) 32 (ஈ) - 32

**4.** $7p^3$ மற்றும் $(2p^2)^2$ இன் பெருக்கற்பலன் (அ) $14p^{12}$ (ஆ) $28p^7$ (இ) $9p^7$ (ஈ) $11p^{12}$

**5.** ஒரு செவ்வக வடிவ நிலத்தின் பரப்பளவு $(a^2 - b^2)$ சதுர அலகுகள் மற்றும் அகலம் $(a - b)$ அலகுகள் எனில் அதன் நீளம்_________ அலகுகள் ஆகும்.

(அ) $a - b$ (ஆ) $a + b$ (இ) $a^2 - b$ (ஈ) $(a + b)^2$

**6.** $9x^2+6xy$ இன் காரணிகள் ________ ஆகும்.

(அ) 3y, (x+2) (ஆ) 3x, (3x+3y) (இ) 6x, (3x+2y) (ஈ) 3x, (3x+2y)

**7.** (x+4), (x-5) ஆகியவை __________ இன் காரணிகள் ஆகும்.

(அ) $x^2-x+20$ (ஆ) $x^2-9x-20$ (இ) $x^2+x-20$ (ஈ) $x^2-x-20$

**8.** ஒரு பழ வியாபாரி ₹200 இக்கு பழங்களை விற்று ₹40 ஐ இலாபமாகப் பெறுகிறார். அவரின் இலாபச் சதவீதம் _____ ஆகும். (அ) 20 % (ஆ) 22 % (இ) 25 % (ஈ) $16\frac{2}{3}$ %

**9.** 16% தள்ளுபடியில், ₹210 இக்கு வாங்கப்பட்ட ஒரு தொப்பியின் குறித்த விலை என்ன?

(அ) ₹243 (ஆ) ₹176 (இ) ₹230 (ஈ) ₹250

**10.** இரு வடிவொத்த முக்கோணங்கள் எப்போதும் _______ பெற்றிருக்கும்.

அ) குறுங்கோணங்களைப் ஆ) விரிகோணங்களைப்
இ)செங்கோணங்களைப் ஈ) பொருத்தமானக் கோணங்களைப்

**11.** 15 மீ உயரமுள்ள ஒரு கொடிக்கம்பமானது காலை 10 மணிக்கு, 3 மீ நீளமுள்ளநிழலை ஏற்படுத்துகிறது. அதே நேரத்தில் ஒரு கட்டடத்தின் நிழலின் நீளமானது 18.6 மீ எனில், கட்டடத்தின் உயரமானது _______ ஆகும்.

அ) 90 மீ ஆ) 91 மீ இ) 92 மீ ஈ) 93 மீ

**12.** 12 செ .மீ மற்றும் 16 செ .மீ பக்க அளவுகளைக் கொண்ட ஒரு செங்கோண முக்கோணத்தின் கர்ணம்_________ ஆகும்.

(அ) 28 செ .மீ (ஆ) 20 செ .மீ (இ) 24 செ .மீ (ஈ) 21 செ .மீ



Please Send Your Model Questions to our Email Id: padasalai.net@gmail.com

**13.** ஒரு செங்கோண முக்கோணத்தின் பக்கங்களின் விகிதம் 5:12:13 மற்றும் அதன் சுற்றளவு 120 அலகுகள் எனில், அதன் பக்கங்கள்__________ ஆகும்.

(அ) 25, 36, 59 (ஆ) 10,24,26 (இ) 36, 39, 45 (ஈ) 20,48,52

**14.** கொடுக்கப்பட்டத் தரவுகளில் ஒரு மதிப்பு எத்தனை முறை வருகிறது எனக் கூறுவது அம்மதிப்பின்________

(அ) நேர்க்கோட்டுக் குறிகள் (ஆ) தரவு (இ) நிகழ்வெண் (ஈ) ஏதுமில்லை

**15.** தொகுக்கப்பட்ட விவரங்களுக்கான வரைபட விளக்கப்படம் ________

(அ) பட்டை விளக்கப்படம் (ஆ) பட விளக்க முறை

(இ) வட்ட விளக்கப் படம் (ஈ) நிகழ்வுச் செவ்வக

**பகுதி - II**

**பொருத்துக** : (5 X 1 = 5 )

**16.** வட்டத்தின் பரப்பளவு - $\frac{1}{4}\pi r^2$

**17.** நாற்கரத்தின் பரப்பளவு - 3a

**18.** வட்டக்கோணப் பகுதியின் பரப்பளவு - $\pi r^2$

**19.** சமபக்க முக்கோணத்தின் சுற்றளவு - $\frac{1}{2}$ x d x $(h_1+h_2)$

**20.** கால்வட்டத்தின் பரப்பளவு - $\frac{\theta}{360^0}\pi r^2$

Padasalai.Net

**பகுதி - III**

**எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.** (10 X 2 = 20)

**21.** கூடுதலைக் காண்க: $\frac{7}{5}+\frac{5}{7}$

**22.** சுருக்குக: $\sqrt{12}+\sqrt{3}$




**23.** வட்ட வில்லின் நீளம் = 48 மீ, r = 10 மீ அளவுகளைக் கொண்ட வட்டக்கோணப் பகுதிகளின் பரப்பளவு காண்க.

**24.** 35 செ .மீ. ஆரமுள்ள வட்ட வடிவிலான ஜிம்னா ஸ்டிக் வளையமானது 5 சம அளவுள்ள விற்களாகப் பிரிக்கப்பட்டு வெவ்வேறு நிறங்களில் வண்ணமிடப்பட்டுள்ளது எனில், ஒவ்வொரு வட்ட வில்லின் நீளத்தையும் காண்க

**25.** (2x + 5y) மற்றும் (3x − 4y) ஐப் பெருக்குக




**26.** படங்களில் உள்ள தெரியாத மதிப்புகளைக் காண்க

**27.** காரணிப்படுத்துக : $x^2$ +14x + 49

**28.** இரண்டு எண்களின் கூடுதல் 36. மேலும் அவற்றுள் ஓர் எண் மற்றோர் எண்ணை விட 8 அதிகம் எனில், அந்த எண்களைக் காண்க.

**29.** தீர்க்க : 2x + 5 = 9

**30.** மழைக்காலத்தின்போது விற்பனையை அதிகரிக்க கடைக்காரர் ஒருவர்ஒரு மழைச் சட்டையின் விலையை ₹1060 இலிருந்து ₹901 ஆகக் குறைத்தார்எனில், அவர் வழங்கிய



Please Send Your Model Questions to our Email Id: padasalai.net@gmail.com

தள்ளுபடி சதவீதத்தைக் காண்க.

**31.** A மற்றும் B ஆகிய இருவரும் இணைந்து ஒரு வேலையை 16 நாள்களில் முடிப்பர் A தனியே அந்த வேலையை 48 நாள்களில் முடிப்பர் எனில், B தனியே அந்த வேலையை எத்தனை நாள்களில் முடிப்பார் ?

**32.** முக்கோணங்களில் தெரியாத பக்கங்களைக் காண்க

**33.** 42 மற்றும் 70 எண்களுக்கு தொடர் கழித்தல் முறையில் மீப்பெரு பொதுக்காரணியைக் காண்க .

**34.** பின்வரும் விவரத்திற்கு வீச்சு காண்க 215 200 120 350 800 600 350 400 180 210 170 305 204 220 425 540 315 640 700 790 340 586 660 785 290 300

## பகுதி - IV

**எவையேனும் எட்டு வினாக்களுக்கு விடையளிக்கவும்**: (8 X 5 = 40)

**35.** விகிதமுறு எண்களை ஏறுவரிசை மற்றும் இறங்கு வரிசையில் எழுதுக

$$\frac{-5}{12}, \frac{-11}{8}, \frac{-15}{24}, \frac{-7}{-9}, \frac{12}{36}$$

**36.** விடையை அடுக்குக்குறியீட்டில் சுருக்கி எழுதுக.

(i) $(3^5 \div 3^8)^5 \times 3^{-5}$ (ii) $(-3)^4 \times \left(\frac{5}{3}\right)^3$

**37.** அடுத்தடுத்த மூன்று ஒற்றை எண்களின் கூடுதல் 75 எனில், அவற்றுள் எது பெரிய எண்?

**38.** ஒரு நிறுவனமானது 20 நாள்களுக்கு 15 வேலை யாள்களுக்கு ₹6 இலட்சம் தொகையை ஊதியமாக வழங்குகிறது எனில், அந்நிறுவனத்திற்கு 5 வேலையாள்களுக்கு 12 நாள்களுக்கு ஊதியமாக வழங்க எவ்வளவுத் தொகை தேவை ?

39. A மற்றும் B ஆகியோர் ஒரு வேலையை 12 நாள்களிலும் B மற்றும் C ஆகியோர் அதை 15 நாள்களிலும் A மற்றும் C ஆகியோர் அதை 20 நாள்களிலும் முடிப்பர் . ஒவ்வொருவரும் தனித்தனியே அந்த வேலையை எத்தனை நாள்களில் முடிப்பர் ?

**40.** ஒரு மெத்தையின் குறித்த விலை ₹7500. இதற்கு இரண்டு தொடர் தள்ளுபடிகள் முறையே 10 % மற்றும் 20 % என வழங்கப்பட்டால், வாடிக்கையாளர் செலுத்த வேண்டியத் தொகையைக் காண்க.

**41.** 2 ஏக்கர் நிலத்தில் நெல்லைப் பயிரிட ஆகும் செலவு கொடுக்கப்பட்டுள்ளது . கீழ்க்காணும் தரவுகளைக் குறிக்கும் வட்ட விளக்கப் படம் வரைக.

| விவரங்கள் | விதைநெல் | உழவுஆள் | கூலி | பூச்சிமருந்து | அறுவடை | மற்றவை |
|---|---|---|---|---|---|---|
| செலவுகள்( ₹ ) | 2000 | 6000 | 10000 | 7000 | 8000 | 3000 |

மேலும், 1. எந்ததலைப்பின் கீழ் அதிகத் தொகைச் செலவிடப்படுகிறது. அதன் சதவீதம் எவ்வளவு? 2. எத்தனைச் சதவீதப் பணமானது விதை நெல் வாங்கச் செலவிடப்படுகிறது?

**42.** Δ ABC இல், S என்பது சுற்றுவட்ட மையம், BC = 72 செ .மீ மற்றும்DS = 15 செ .மீ எனில் சுற்றுவட்டத்தின் ஆரத்தைக் காண்க.

**43.** 184, 230 மற்றும் 276 என்ற எண்களுக்குத் தொடர் வகுத்தல் முறையில் மீப்பெரு பொதுக்காரணியைக் காண்க.



Please Send Your Model Questions to our Email Id: padasalai.net@gmail.com

**44.** படத்தில் கொடுக்கப்பட்டுள்ளவாறு அளவுகளைக் கொண்டுள்ள ஒழுங்கற்ற பலகோண வடிவ நிலத்தின் பரப்பளவைக் காண்க.




**45.** கமலேஷ் என்பவர் 70 செ .மீ. ஆரமுள்ள வட்ட வடிவ உணவுமேசையும், தருண் என்பவர் 140 செ .மீ. ஆரமுள்ள கால்வட்ட வடிவ உணவுமேசையும் வைத்துள்ளனர் எனில், யாருடைய உணவுமேசை அதிகப் பரப்பளவைக் கொண்டுள்ளது? $\left(\pi = \frac{22}{7}\right)$




**46.** 6 செ.மீ விட்டமுள்ள அரை வட்டத்தையும், அடிப்பக்கம் 6 செ .மீ மற்றும் உயரம் 9 செ .மீ அளவுள்ள முக்கோணத்தையும் படத்தில் உள்ளவாறு இணைத்து உருவாக்கப்பட்டக் கூட்டு வடிவத்தின் பரப்பளவைக் காண்க. $(\pi = 3.14)$

**பகுதி** - V

<u>**பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்**</u> **( 2 X 10 = 20 )**

**47.(அ)** DE = 6 *செ .மீ*, EA = 5 *செ .மீ*, AR = 5.5 *செ .மீ*, RD = 5.2 *செ .மீ. மற்றும்* DA = 10 *செ .மீ.* ஆகிய அளவுகளைக் கொண்ட DEAR என்ற நாற்கரம் வரைந்து, அதன் பரப்பளவைக் காண்

**( அல்லது )**

(ஆ) AB = 5 செ .மீ, BC = 4.5 செ .மீ, CD = *3.8* செ .மீ, DA = 4.4 செ .மீ மற்றும் AC = 6.2 செ .மீ ஆகிய அளவுகளைக் கொண்ட நாற்கரம் ABCD வரைந்து, அதன் பரப்பளவைக் காண்

**48.** (அ) சமன்பாடுகளுக்கு வரைபடம் வரைக. y = 2x+5

**( அல்லது )**

(ஆ) (-3,7) (2,-4) மற்றும் (4,6) (-5,-7) என்ற புள்ளிகளை இணைத்து உருவாகும் கோடுகள் சந்திக்கும் புள்ளியைக் காண்க. மேலும் நேர்க்கோடுகள் ஆய அச்சுகளைச் சந்திக்கும் புள்ளிகளையும் காண்க.

Padasalai.Net

**ALL THE BEST**

************



Please Send Your Model Questions to our Email Id: padasalai.net@gmail.com